**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register)  CC.571/2024
Sessions)

Deposition of witness for  (Prosecution P.W.10
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | **சங்கர்கண்ணன்** | -- | |
| Father's Name | **மகாலிங்கம்** | Calling | **காவல் ஆய்வாளர்** |
| Village | **கிருஷ்ணன்கோவில்** | Religion | |
| Taluk | | Age | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 15th Day of June 2026..

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 26.06.2023ம் தேதி 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் நாகராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது பால்பாண்டி என்பவர் கொடுத்த புகார் மனுவைப்பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண். 292/2023 பிரிவு 279, 337 IPC ஆக வழக்கு பதிவு செய்தார். அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா, தங்கேஸ்வரன் ஆகியோர் முனனிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலமும் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் பால்பாண்டி, போஸ், பொன்னுத்தாயி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 04.07.2023 அன்று எதிரி ஓட்டி வந்த TN 84 E 2992 அபே ஆட்டோவை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்காக ஒப்படைத்துள்ளார். 14.07.2023 அன்று இவ்வழக்கில் காயம் பட்ட பாலகணேசன் என்பவர் சிகிச்சை பலனின்றி 13 மணிக்கு இறந்துவிட்டதால் சட்டப்பிரிகளை 279, 337 லிருந்து 279, 304(A) ஆக மாறுதல் செய்து வழக்குக் கோப்பினை எனது புலன் விசாரணைக்கு வைத்தார். அதன்பின்பு வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நான் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். ஏற்கெனவே சார்பு ஆய்வாளர் பார்வை மகஜரும் மாதிரி வரைபடமும் தயார் செய்துவிட்டதால் நான் புதிதாக தயார் செய்யவில்லை. பின்னர் சாட்சிகள் பால்பாண்டி, போஸ், பொன்னுத்தாயி ஆகியோர்களிடம் விசாரணை செய்து மறுவாக்குமூலம் தயார் செய்தேன். மேற்படி

17.07.2023 அன்று மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை சென்று பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 06.30 மணி முதல் 08.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். சாட்சிகள் சரவணன் , கருப்பசாமி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவலர் 3455 செல்வக்குமார் என்பவர் பிரேத பாதுகாப்பு அலுவலராக அனுப்பி வைத்தேன். அவர் மேற்படி பிரேதத்தை மருத்துவர் மணிகண்டன் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்குப்பின் பிரேதத்தை பெற்றுக்கொண்டு உறவினர்களிடம் ஒப்படைத்தார். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9.** பின்னர் மருத்துவர் மணிகண்டன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.12.2023 அன்று வழக்கில் சம்பந்தப்பட் வாகனம் TN 84 K 7506 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தும் விசாரணை செய்தும் வாக்குமூலம் பெற்றேன். பின் மருத்துவர்கள் நாராயணன், ரகுலன் ஆகியோர்களை விசாரத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் நாகராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் 13.04.2024 அன்று இவ்வழக்கின் எதிரி பாண்டிச்செல்வம் என்பவர் நிலையத்தில் ஆஜரானவரை கைதுசெய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் எனது புலன் விசாரணைக்குப் பின்பு இவ்வழக்கின் இறுதி இறிக்கையை இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தில் இறந்து போன பாலகணேசன் சம்பவத்தன்று மதுபோதையில் தான் இருந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்பவத்தில் இறந்து போன பாலகணேசன் சம்பவத்தன்று மதுபோதையில் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் TN 84 K7506 என்ற இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்து எதிரியின் ஆட்டோ மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றார் சரியல்ல. எதிரி பிள்ளையார்நத்தம் விலக்கு அருகே TN 84 E2992 என்ற ஆட்டோவை இன்டிகேட்டர் போட்டும் சாலை விதிகளை பின்பற்றியும் திரும்பத் தயாராக இருந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 மேற்படி சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டின் நகலில் இறந்துபோன பாலகணேசன் என்பவர்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று ஆட்டோ மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் 6 வரை உள்ள சாட்சிகள் வழக்கில் இறந்துபோன நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் பார்வை மகஜரின் சாட்சிகளையும், அ.சா.9 சார்பு ஆய்வாளரையும் சரிவர நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது இறந்துபோன நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன நபரை யார் மருத்துவமனையில் சேர்த்தது என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அ.சா.1 மருத்துவமனையில்

சேர்த்துள்ளார். விபத்தில் இறந்துபோன நபரை மருத்துவமனைக்கு அ.சா.1 கொண்டுசெல்லவில்லை என்றாலும் அவ்வாறு அ.சா.1 கொண்டுசென்றிருந்தால் மருத்துவர் அவரது பெயரை குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் மற்றும் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் பிரேத அறிக்கை விசாரணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.06.15 17:12:28 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**